**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| **வழக்கு எண்** | OS | 109 | of | 2018 |

**2025-ம் ஆண்டு ஜுலை திங்கள் 16-ம் நாளான இன்று**

| | |
|---|---|
| **வாதி/பிரதிவாதி**<br>**மனுதாரர்/எதிர்மனுதாரர்** | **தரப்பில் வா.சா.1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.** |

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **ராமநாதன்** | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-16.07.2025**

**வா.சா.-1**

**1 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

வா.சா.ஆ.3 கிரய பத்திரம் பதிவு செய்ய நான் சார் பதிவாளர் அலுவலகம் செல்லவில்லை. வா.சா.ஆ.5 சொத்து நான் கிரயம் செய்த பிறகுதான் எனக்கு கொடுக்கப்பட்டது. கிரய பத்திரத்தில் கையொப்பம் இட்டுள்ளர் நபர் நேரடியாக சார் பதிவாளர்அலுவலகம் சென்று கையொப்பம் இட்டாரா என்று எனக்கு தெரியாது. நான் பணிபுரிந்த அண்ணா மருத்துவமனையில் அனுமதிகோரி விண்ணப்பம் கொடுத்து அது நிலுவையில் இருந்தபோது கிரயம் பெற்றேன். அதன்பிறகு எனக்கு அனுமதி

வழங்கப்பட்டது. வா.சா.ஆ.5 க்கு முன்பு எனக்கு கொடுக்கப்பட்ட அனுமதி உத்தரவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ-2 கிரய பத்திரம் வா.சா.ஆ.3 பெறப்படுவதற்கு பின்புதான் கொடுக்கப்பட்டதா என்றால் அதுபற்றி ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.4 ரசீது வா.சா.ஆ 3 க்கு பின்னிட்டுதான் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால், கிரய பதிவிற்கு முதல் நாளே கொடுக்கப்பட்டுவிட்டது. கிரய பதிவு 10.07.1985 அன்று செய்யப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட கிரய பத்திரம் சில நாட்களிலேயே என்னிடம் வழங்கப்பட்டது. கிரய வாங்கிய இடத்தில் பதாகை மற்றும் என் செல்போன் எண் வைத்தேன் என்பதை காட்ட புகைப்படம் தாக்கல் செய்யவில்லை. நான் கொடுத்த புகாரின்பேரில் போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.2 ம் பிரதிவாதியிடம் இருந்து 1ம் பிரதிவாதி மேற்படி சொத்தை கிரயம் வாங்கியது தாவா தாக்கல் செய்வதற்கு 4,5 நாட்களுக்கு முன்பு எனக்கு தெரிய வந்தது. 2017 ம் ஆண்டு புதுக்கோட்டையில் நான் குடியிருந்தேன். என் கிரய பத்திரம் மற்றும் 1ம் பிரதிவாதி கிரய பத்திரம் இரண்டையும் ஆய்வு செய்ய நான் முயற்சிகள் மேற்கொள்ளவில்லை. வா.சா.ஆ.14 ல் உள்ள 2 ம்பிரதிவாதியின் விலாசத்திற்கு சென்று அவர் மீது போலீசார் நடவடிக்கை எடுத்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.14 ல் கண்டுள்ள காலி மனை கட்டிடம் எழுப்பப்படாமல் அப்படியே உள்ளது. 1ம்பிரதிவாதியின் ஆவணத்தை போலீஸ் விசாரணையில் நான் கொடுக்கவில்லை. போலீஸ்சார் என்னிடம் விசாரணை நடத்தினார்கள்.

1ம்பிரதிவாதியிடம் ஆவணங்களை பெற்று விசாரணை நடத்தினார்களா என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.14 சொத்தை 1ம் பிரதிவாதி 2ம்பிரதிவாதியிடம் இருந்து உரிய கிரய தொகை செலுத்தி முறையாக கிரயம் பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா-ஆ.3 ல் சாஸ்திரி பவன் ஊழியர்கள் வீட்டு மனை குடியிருப்போர் சங்கம் மனையை ஒதுக்கியதாக தவறாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 கிரய பத்திரம் மேற்படி குடியிருப்போர் சங்கத்தினால் பதிவு செய்யப்படவில்லை என்றால் அதை மறுக்கிறேன். அதனால்தான் 2017ம் ஆண்டு வரை சொத்து குறித்து நான் கவனம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியிடம் இருந்து சொத்து குறித்த அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து அதன் பிறகுதான் வா.சா.ஆ.14 சொத்தை முறையாக கிரயம் பெற்றார் என்றால் சரியல்ல. எனவே தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு தாவாவில் கோரப்பட்டுள்ள பரிகாரம் கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை-இல்லை.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu
Date: 2025.07.17 10:10:49 +0530